**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 21/2024**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **சந்திரசேகர்** | **Caste** | : |
| **Father's Name** | : நடராஜன் | **Calling** | : **கூலி வேலை** |
| **Village** | : **கோவிந்தாபுரம்** | **Religion** | : |
| **Taluk** | : **திண்டுக்கல்** | **Age** | : **54** |
| | | **Dated** | : **29.07.2025** |

**29.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 திரு.**சந்திரசேகர்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1ம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

**2ம் எதிரி ஆஜரில்லை.**

1. நான் திண்டுக்கல் கோவிந்தாபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 07.11.2023ம்தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு நான் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்தேன்.அப்போது எனது TVS XL TN–59–AH–9004 இருசக்கர வாகனத்தை வீட்டில் வாசலில் நிறுத்திவிட்டு சாப்பிட்டு விட்டு 02.30 மணிக்கு வெளியே வந்து பார்த்தபோது எனது இருசக்கர

வாகனத்தை காணவில்லை. பின்எனது இருசக்கர வாகனத்தை தேடி பார்த்தேன். இருசக்கர வாகனத்தின் RC புக் பைனான்சில் இருந்ததால் பைனான்ஸ்காரர்கள் எடுத்து சென்றிருப்பார்கள் என்று பைனான்ஸ்காரர்களிடம் விசாரித்து பார்த்தேன். அவர்கள் எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார். பின் கடந்த 13.11.2023ம் தேதி இதுசம்மந்தமாக நடவடிக்கை எடுக்க காலை 10.00 மணிக்கு போலிசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை என்னுடன் வந்த நபர் எழுதினார். **(புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அன்று மாலை 04.30 மணிக்கு போலிசார் இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக சொல்லி என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். நான் காவல் நிலையம் சென்றேன். எனது இருசக்கர வாகனத்தை காட்டினார்கள். நான் எனது வண்டியை அடையாளம் காட்டினேன். பின் இரண்டு நபர்களை அடையாளம் காட்டி அவர்கள் தான் இருசக்கர வாகனத்தை திருடியதாக சொன்னார்கள். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட தெரியும். அவர்கள் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையது தான். **(இருசக்கர வாகனத்தின் புகைப்படம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது இருசக்கர வாகனம் காணாமல் போன அன்றே புகார் அளித்தேனா என்றால் இல்லை 13.11.2023ம் தேதி தான் புகார் கொடுத்தேன். புகார் 7 நாட்கள் காலதாமத்திற்கு காரணமாக புகார் மற்றும் போலிசார் விசாரணையில் நான் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காணாமல் போன இருசக்கர வானத்தை நான் எங்கு எங்கு தேடினேன் என்ற விபரத்தை புகார் மற்றும் போலிசார் விசாரணையில் நான் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனம் எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆதரவாக RC புத்தகம் எதையும் புகார் உடனோ அல்லது போலிசார் விசாரணையிலோ நான் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.29 16:10:49 +0530

Judicial Magistrate No.I

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 21/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **லலிதா** | **Caste** | : | |
| **Husband's Name** | : | சந்திரசேகர் | **Calling** | : | **இல்லத்தரசி** |
| **Village** | : | **கோவிந்தாபுரம்** | **Religion** | : | |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **47** |
| | | | **Dated** | : | **29.07.2025** |

**29.07.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திருமதி.**லலிதா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>1ம் எதிரி ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

**<u>2ம் எதிரி ஆஜரில்லை</u>**

1. நான் திண்டுக்கல் கோவிந்தாபுரத்தில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அசா.1 சந்திரசேகர் எனது கணவர். கடந்த 07.11.2023ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு அசா.1 சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்தார்.அப்போது அசா.1 எனது கணவரின் TVS XL இருசக்கர வாகனத்தை வீட்டில் வாசலில் நிறுத்திவிட்டு சாப்பிட்டு விட்டு 02.30

மணிக்கு வெளியே வந்து பார்த்தபோது இருசக்கர வாகனத்தை காணவில்லை. பின் இருசக்கர வாகனத்தை அக்கம் பக்கத்தில் தேடி பார்த்தோம். இருசக்கர வாகனத்தின் RC புக் பைனான்சில் இருந்ததால் பைனான்ஸ்காரர்கள் எடுத்து சென்றிருப்பார்கள் என்று அசா.1 பைனான்ஸ்காரர்களிடம் விசாரித்தார். அவர்கள் எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். பின் கடந்த 13.11.2023 ம் தேதி இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க காலை 10.00 மணிக்கு போலிசில் அசா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவரின் இருசக்கர வாகனம் காணாமல் போன அன்றே தான் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அடுத்த நாள் விசாரித்தார்கள்.காணாமல் போன இருசக்கர வானத்தை நான் எங்கு எங்கு தேடினேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் நான் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அசா.1 எனது கணவர் என்பதாலும், போலிசார் கேட்டுக் கொண்டதாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.07.29 16:10:56 +0530

Judicial Magistrate No.I

Dindigul.